## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 100

### பிலிப்பியர் I - 4 அதிகாரங்கள்



Book - Post

பெறுநர் : திரு/திருமதி

↓↓↓

1. ஊழியத்தினிமித்தம் மரணத்திற்கு சமீபமாயிருந்தவன். (9)
2. சிந்தித்துக் கொண்டிருக்கும்படி சொல்லப்பட்டவைகளுள் ஒன்று (6)
3. எல்லா புத்திக்கும் மேலானது (7) கடைசி நாலு எழுத்துக்கள் (6) →↑
4. பிலிப்பியரிடத்திற்கு சீக்கிரம் யாரை அனுப்பலாம் என பவுல் யோசித்தார்? (5)
5. பவுலின் கோத்திரம் (5)
6. சிலர் சுவிசேஷத்தை அறிவிக்கும் விதம். (5)
8. வேறு விதமாய் நடப்பவர்களுடைய தேவன் ........... (3)
10. எப்பாப்பிரோதீத்து கையில் வரப்பற்றிக் கொண்ட காணிக்கை எப்படிப்பட்டது என வர்ணிக்கும் காரியங்களில் ஒன்று (7) கடைசி 3 எழுத்துக்கள் ←
11. ................ எனக்கு ஆதாயம் (2)

→→→

1. கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்கும்படி சொல்லப்பட்டவர்கள் (5) மற்றும் ↑9 (6)
2. தேவன் உங்களில் எதனைத் தொடங்கினார்? (6) கடைசி இரு எழுத்துக்கள்↓
7. கிறிஸ்து எனக்கு ................. (3)
12. வேறுவிதமாய் நடப்பவர்களின் முடிவு (3) கடைசி எழுத்து↑
13. நியாயப்பிரமாணத்தின்படி பவுல் ஒரு ...................... (5) கடைசி இரு எழுத்துக்கள் ↑

↑↑↑

6. இயேசு கிறிஸ்து ............. ரூபமெடுத்து மனுஷ சாயலானார். (5) கடைசி எழுத்து ←
10. நியாயப் பிரமாணத்தினால் வருவது. (4)
14. இயேசு கிறிஸ்துவினுடைய ..................... உங்களனைவரோடும் கூட இருப்பதாக. (3)

←←←

14. சுவிசேஷ விஷயத்தில் உடன வேலையாட்களோடும் பவுலோடும் மிகவும் பிரயாசப்பட்டவன். (5)



SSA
THE SPROUTED STAFF OF AARON

# ஆரோனின் துளிர்த்த கோல்

வேதம் அறிவோம், தேவர்களாவோம்

மாத இதழ் : நவம்பர் 2020

## பிலிப்பியர் 4 : 13

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு.**

## Hosea 14:5a

It was a summer morning. The prior evening, when I visited the field, leaves on the tender corn were drooping from intense heat and lack of rain. But in the morning the spikes were straight and fresh, and each leaf was adorned with sparkling drops of dew.

This, according to the prophet Hosea, is a picture of what the Lord would do for His people. **"I will be like the dew to Israel".** When our spirits droop, when we are burdened by a load of cares, or when we are carrying the guilt of sin, our Lord offers His mercy and grace to be like refershing dew to our souls. His foregiveness, comfort and strength are showered on us in the quiet times of prayer and meditation on His Word.

So spend some time each day with God in prayer and in the study of His Word.

---

பரிசு பெறுபவர்கள்:

1) திருமதி. **Dr. விஜயலலிதா** திருச்சி 2) திருமதி. **இமெல்டா சுந்தர்சிங்** ஈரோடு

**அன்புடையீர், வணக்கம்.**

## அசையும் அஸ்திபாரங்களுக்கு அங்கலாய்க்கும் ஆத்துமா

எந்த திசை திரும்பினாலும் அநியாயமும், அக்கிரமும், அட்டூழியங்களும் தலைவிரித்து ஆடுவதைக் கண்டு நம் ஆததுமா அநேக வேளைகளில் சோர்ந்து போகிறது. சாலொமோன் ஞானி தான் கண்டதை இவ்வாறு பதிவு செய்கிறார். பின்னும் சூரியனுக்குக் கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியயம் இருந்தது; நீதிஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது (பிரசங்கி 3:16) இவ்வாறு அசையும் அஸ்திபாரங்களுக்கு அங்கலாய்த்த அவர் ஆத்துமா உடனே வேறு சிந்தையாகி, சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும், நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன் என்று எழுதி வைத்திருக்கிறார். (பிர.3:17)

தாவீது அரசன் தேவனுடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது என்கிறார். ஆண்டவருடைய கண்களுக்கு மறைவாக வானத்திற்கு பறந்தோ பாதாளத்தில் படுக்கைப் போட்டாலோ மறைந்திருக்க முடியாது. (சங்கீதம் 11:4, 139:8) நல்லோரையும் பொல்லோரையும் கர்த்தரின் கண்கள் கவனித்துக் கொண்டே இருக்கிறது. அவருடைய கண்களுக்கு எவரும் தப்ப முடியாது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆனால் தேவனுக்கு விரோதமாக நாம் பேசும் பேச்சுகள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தரே சொல்கிறார். காரணம் துர்க்கிரியைக்குத் தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது. மறந்துபோக வேண்டாம். கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது.

தேவனுடைய இமைகள் மனுபுத்திரரைச் சோதித்தறிகிறது. சன்மார்க்கனையும் துன்மார்க்னையும் கர்த்தருடைய இமைகள் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பிரித்து வலது இடது பக்கத்தில் நிறுத்துவது போல நிறுத்தும். ஆபிரகாமை ஆண்டவரின் இமைகள் சோதித்தறிந்த பின்னரே விசுவாசத்தின் தகப்பன் என்னும் சாட்சியை தேவன் அளிக்கிறார். கர்த்தரின் இமைகள் எப்பொழுதும் திறந்திருக்கிறது. அவை மனுபுத்திரரைச் சோதித்தறிகிறது. (சங்கீதம் 11:4)

கர்த்தருடைய உள்ளம் நீதிமானை விரும்புகிறது. துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது (சங்கீதம் 11:5). தேவனுடைய உள்ளம் பரிதபிக்கும் உள்ளம். அப்படிப்பட்ட உள்ளம் நீதிமானின் மேல் பிரியமாயிருக்கிறது. துன்மார்க்கனையும் சான்மார்க்கனாக்க வேண்டும் என அவருடைய உள்ளம் துடிக்கிறது.

தேவனுடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது. கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார். (சங்கீதம் 11:7) நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார். தீமை செய்கிறவர்களுக்கு விரோதமாக கர்த்தருடைய முகம் இருக்கிறது.

அஸ்திபாரங்களே அசைகிறதே என்று அங்கலாய்க்கும் ஆத்துமாவுக்கு ஆண்டவர் அளிக்கும் ஆறுதல் இவைகளே. கவலைப்படாதே மகனே / மகளே கர்த்தருடைய கண்கள், இமைகள், உள்ளம், முகம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறது. நீதிமான் செயலற்று போகும் வேளைகளில் தேவனுக்கு பயப்படுகிற பயமும், அவருடைய நாமத்தை தியானிக்கிறவர் –களாகவும் இருக்கும்போது கர்த்தரே அங்கு செயலாற்றுவதைக் கண்கூடாகக் காணலாம்.

திருமதி. **எஸ்தர் இராபின்சன்,** சென்னை



| | |
|---|---|
| பினேகாஸ் – தைரியத்தோற்றம் | யந்நே, யம்பிரே – எகிப்திய மந்திரவாதிகள் |
| பென்யமீன் – வலதுகரத்தின் மகன் | யாக்கோபு – தட்டி வீழ்த்துபோன் |
| மன்னா – இது என்ன? | யூதா – துதி |
| மாசா – பரீட்சை, மாரா – கசப்பு | யேகோவா – நிதி – கர்த்தர் என் ஜெயக்கொடி |
| மீசவேல் – தேவனைப் போலிருப்பவன் யார்? | யோசுவா – யேகோவா மீட்டு |
| மீதியான் – கலகம் | யோசேப்பு – பெருக்கம் |
| மெராரி – கசப்பு | ரூபன் – இதோ ஒரு மகன் |
| மேரியா – வாக்குவாதம் | ரெகுவேல் – யேகோவா சிநேகிதர் |
| மோசே – ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன் | லேவி – இணக்கம் |

## கடந்த மாத வேதவினா குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.

**I.** 1. **P.D.** கமலம்**,** 2. ஜான்சன் உத்தம் குமார், 3. ஸ்டெல்லா ஜான்சன், 4. ஹெப்சி பானுமதி, 5. பிரியா ஜெனிட்டா, 6. சௌந்தர்யா, 7. சோபியா பிரேமி.

**I & II.** 1. மோகன் **J.** ராஜ், 2. ஆனி கில்சன் **III & I.** 1. ஜெயசீலி ஜெயராஜ்

**II & III.** 1. பெபல் ஜீவகி தாமஸ், 2.தேவதாஸ் செல்வக்குமார், 3. சுதந்திரதேவி, 4. காந்தா மனோகரன், 5. அன்னமேரிராஜ், 6. வைலட் சாமிக்கண், 7. சுகந்தி ஜோன்ஸ், 8. வர்ஜீனியா, 9. சாந்தி குணா, 10. மத்தேயு மாற்கு, 11. சந்திரா சைமன், 12. **S.** தனபாக்கியம், 13. ரூத் வயலட் வசந்தா, 14. ஃபான்சி, 15. **J.** ஏஞ்சலினா, 16. ஏஞ்சலின் சிந்தியா, 17. **T.K.** சுகந்தா, 18. ஜாய்ஸ் சுசீலாதேவி, 19. **V.** கலாவதி, 20. பியூலா ஜெயபிரகாஷ், 21. பிளவர் ஷீலா, 22. பத்மாவதி ஞானபிரகாசம், 23. **G.T.** ஜுலி, 24. ஜாய்ஸ் மணிமொழி, 25. ஹேமலதா ஜெயசந்தர், 26. அனிதா மெர்லின், 27. ரோப்பா கிறிஸ்டல், 28. **Dr.** விஜயலலிதா. 29. **S.** செல்வமணி, 30. ஏஞ்சலின் சிந்தியா

**III.** 1. ஷீலா ஜான்சன், 2. குணதிலகா யோனத்தான், 3. லல்லி, 4. பிரான்சிஸ், 5. பத்மாவதி, 6. எலிசபெத், 7. மேரி எலிசபெத், 8. ரூபி சகுந்தலா, 9. எஸ்தர் ராபின்சன், 10. சித்ரா பாபு, 11. குளோரி, 12. **Sis.** ஜுலியட் சுபமங்களா, 13. **Sis.** நகோமி, 14. **Sis.** சலோமி, 15. சுபா வணக்கராஜ், 16. ஏவாள், 17. சாந்தி செல்லையா, 18. லிடியா காந்தன், 19. ஞானதீபம்.

**I, II & III.** 1. பிரேமா வில்சன், 2. ரூபல்லா அற்புதராஜ், 3. ஜாய் ஜோசப், 4. ரெஜினாமேரி மனோகரன், 5. ஜோசப் அதிசயம், 6. திலகவதி அதிசயம், 7. ஜெயா, 8. பாக்கியராணி, 9. மனோகரி பெஞ்சமின், 10. வசந்தி ஸ்டான்லி, 11. பிரேமலதா தியாகராஜன், 12. கிரேஸ் பிராங்கிளின், 13. ராணி தனராஜ், 14. மார்கிரேட் எலிசபெத், 15. ஜேனட் குணசேகரன், 16. பாலின் மார்டீன், 17. ஜெயசீலி பால்ராஜ், 18. ஷாலினி இம்மானுவேல், 19. எலிசபெத், 20. சந்திரா இம்மானுவேல், 21. பியூலா ஜேசுராஜன், 22. சூசன் சுமித்ரா, 23. ஜாகுலின் உஷா, 24. அன்புக்கமலம், 25. ஐவி கலாவதி, 26. நிர்மலா டேவிட், 27. பியூலா நவமணி, 28. இமெல்டா சுந்தர்சிங், 29. ஷீலா பாலகுமார், 30. ஹெலன் சேசுராஜ், 31. செலன் ராணி டேவிட், 32. ரீட்டா ரோசலிண்ட், 33. ஜெயசீலி ரவிச்சந்திரன், 34. மல்லிகா எட்வின், 35. சாந்தி வில்லியம், 36. விமலா ரோசபெல், 37. ராணி தனராஜ், 38. மிராண்டா, 39. ஒலிவியா லாங்டன், 40. கிறிஸ்டினா பெஞ்சமின், 41. ஸ்நேகா ஹென்றி, 42. சுகுணா எலிசபெத், 43. ஜுலியட் கிருபாகரன், 44. ஜீவா செல்வராணி, 45. ஜாஸ்மின் உஷாராணி, 46. ஆனி ஜான்சன், 47. ரூபி காட்பிரே டேவிட், 48. மோனிகாள் காந்திநாத், 49. மீரா பாண்டியன், 50. கமலா ஜார்ஜ், 51. சலோமி எட்வின், 52. லலிதா அருண் ஜான்சன், 53. விமலா குழந்தைசாமி, 54. நகோமி எடிசன், 55. ராணி சாந்தகுமார், 56. சாந்தி ஜோயல், 57. ஜுலியா சார்லி, 58. ரோஸ்லின் திலகவதி, 59. ஜுலா கிரேஸ்

வேதாகமம் போட்டிகளிலும், தேர்விலும் உற்சாகத்துடன் கலந்து கொள்ளும் ஈச்சம்பட்டியைச் சார்ந்த திருமதி. **சின்னம்மாள் மேரி 29.10.2020** அன்று மறுமைக்கு உட்பட்டார். அவரது ஆன்மா சாந்தியடையும், அக்காவை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதலும் தேறுதலும் தரவும் தேவனிடம் பிரார்த்திக்கிறோம். – **SSA** அமைப்பு உறுப்பினர்கள்.

## யாத்திராகமத்தில் நிழலும் பொருளும்

பஸ்கா ஆட்டுக்குட்டி, கிறிஸ்துவிற்கு முன்னடையாளம் (12:3-28; யோவா. 1:29; 1 கொரி. 5:7) மேகஸ்தம்பமாகவும் அக்கினி ஸ்தம்பமாகவும் கிறிஸ்து செயல்பட்டார் (13:22; 1 கொரி. 10:1). சிவந்த சமுத்திரத்தின் தண்ணீராலான மதில்களின் இடையில் மேகத்தின் கீழ் இஸ்ரவேலர் கடந்து சென்றது கிறிஸ்துவுக்குள் தண்ணீர்த் திருமுழுக்கிற்கும் ஆவியானவரின் திருமுழுக்கிற்கும் ஒப்பானவை (14:16-22;1 கொரி. 10:1-2). வானத்திலிருந்து பெய்த மன்னா, கிறிஸ்துவின் நிழல் ஆகும் (16:4-36; யோவா. 6:31-58; 1 கொரி.10:3) தண்ணீர் அளித்த கன்மலை கிறிஸ்துவிற்கு முன்னடையாளம் (17:5-6; 1 கொரி.10:4). ஆசரிப்புக் கூடாரமானது (25:8), சபைக்கும் (எபே.2:19-21) விசுவாசிக்கும் (1 கொரி. 3:16) பரலோகத்திற்கும் (எபி. 9:23-24; வெளி. 15:5) முன் நிழலானது. உடன்படிக்கைப் பெட்டியானது (25:10), தமது இருதயத்தில் தேவனுடைய பிரமாணத்தை வைத்திருந்து நிறைவேற்றிய கிறிஸ்துவின் முன்னடையாளம் (மத். 5:17). ஆசாரியரால் உண்ணப்பட்ட சமுகத்து அப்பம், கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் பங்கேற்பதற்கு அடையாளம் (யோவா. 1:4,9; 8:12; 9:5). பரிசுத்த இடத்திற்கும் மகாபரிசுத்த இடத்திற்கும் இடையில் இருந்த திரைச்சீலை (26:31-33), கிறிஸ்துவின் சரீரத்தின் மாதிரியாகும் (மத்.27:50-51; எபி. 10:19-20) பலிபீடம், (27:1) இயேசு மரணமடைந்த சிலுவையின் முன் நிழலானது (எபி. 7:27; 9:14). எண்ணெய் (27:20) தூய ஆவியானவரைக் குறிக்கிறது. வெண்கலத் தொட்டி (30:13) நம்மைப் பாவமறக்கழுவி சுத்திகரிக்கும் கிறிஸ்துவுக்கு (எபே. 5:25-27) மாதிரியாகும். தூபமானது பரிசுத்தவான்களின் ஜெபமாகவும் (வெளி.8:3-4) தூபபீடமானது (30:1) பரிந்து பேசும் கிறிஸ்துவுக்கும் (ரோம. 8:34; எபி. 7:25) பரிந்து பேசும் ஆவியானவருக்கும் (ரோம. 8: 26-27) மாதிரியாகவும் அமைகின்றன.

நூலின் அளவு : அதிகாரங்கள் : 40. வசனங்கள் : 1213

### அர்த்தம் அறிவோம்

| | |
|---|---|
| அபியூ – அவர் என்பிதா | எலியேசர் – தேவன் என் துணை |
| அமலேக்கியர்– பள்ளத்தாக்கில் குடியிருப்பவன் | எலேயாசார் – தேவன் உதவி |
| ஆசேர் – பாக்கியவான் | ஏதோம் – சிவப்பு |
| ஆபீப் – பசுங்கதிர் (தற்கால சித்திரை மாதம்) | ஏலிம் – பேரீச்ச மரங்கள் |
| ஆபிரகாம் – திரள் ஜனத்தின் தகப்பன் | ஓரேப் – வனாந்தரமான |
| ஆரோன் – உயர்வு | காத் – கூட்டம் |
| இஸ்ரவேல் – கர்த்தரோடு போராடினவன் | சிமியோன் – கேட்குதல் |
| ஈசாக்கு – நகைப்பு | சுக்கோத் – குடிசைகள் |
| ஊசியேல் – தேவவல்லமை | தாண் – நியாதிபதி |
| ஊரீம், தும்மீம் – வெளிச்சங்கள், உத்தமங்கள் | தீமோத்தேயு – தேவமேன்மை |
| எத்திரோ – மேன்மை | நப்தலி – மல்யுத்தம் |
| எபிரேயன் – பரதேசி | நாதாப் – உதாரமுள்ள |
| எபிரோன் – ஐக்கியம் | பவுல் – சிறுமை |
| எமோரியர் – மலைவாசிகள் | பார்வோன் – சூரியன் |





### சீனாய் மலைக்கு தேவனின் அதிசய வழிநடத்துதல் ... அதி. 18

ரெவித்தீமில் மோசேயின் மாமன் எத்திரோ மோசேயினால் திருப்பி அனுப்பப்பட்ட தன் மகளோடும், பேரப்பிள்ளைகளோடும் அவனை சந்திக்கிறார். இனிய சந்திப்புக்குப் பின் மக்களை நியாயம் விசாரித்த மோசேயிடம் நீர் செய்கிற காரியம் நல்லதல்ல. ஒன்றியாய் இதைச் செய்யாமல் தகுதியுள்ள மக்களைத் தெரிவு செய்து வேலையை பகிர்ந்தளிக்க ஆலோசனை கூறுகிறார். எளிய மனதுடைய மோசே அதனை ஏற்றதால் அனைவருக்கும் காரியங்கள் இலகுவாயிற்று.

### III. சீனாய் மலையில் அதிசய வெளிப்பாடுகள் : அதி. 19-40

எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் 3-ம் மாதம் சீனாய் வந்தடைந்தனர். யாத் .19-ம் அதிகாரத்தில் சீனாய் மலையின் அடிவாரத்தில் துவங்கும் நிகழ்வுகள் யாத். 40 அதிகாரம், வேதத்தின் 3-ம் நூலான லேவியராகமம், அதனைஅடுத்து உள்ள எண்ணாகமம் 10:11-ம் பகுதிவரை நீண்டு காணப்படுகிறது. அதாவது இஸ்ரவேலரது பயணத்தின் 2-ம் வருஷம் இரண்டாம் மாதம் 20-ம் தேதி வரை உள்ள நிகழ்வுகள் அடங்குகின்றன.

தாம் தெரிந்து கொண்ட ஜனங்களை ஆசாரியர்களாகவும், ராஜாக்களாகவும் உருவாக்க, உயர்த்த அவர்களை ஆயத்தப்படுத்துகிறார். முதலாவது பரிசுத்தம் பண்ணப்பட கட்டளை பிறப்பிக்கிறார். இரண்டாவதாக தேவதரிசனத்தை அளித்து தமது வல்லமையைத் தெரிந்து கொள்ளச் செய்கிறார். 20-ம் அதிகாரம் முதல் நியாயப்பிரமாண காலம் துவங்குகிறது. கர்த்தர் அளித்த நியாயப்பிரமாணத்தில் 1) கற்பனைகள், 2) நியாயத்தீர்ப்புகள், 3) நியமங்கள் ஆகிய முக்கிய பகுதிகள் இடம் பெறுகின்றன. கற்பனைகள் என்பது மக்கள் நிறைவேற்ற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கும் நீதியான செயல்கள் (20:1-26) இதில் தேவனோடு நாம் கொள்ளும் உறவு, சக மனிதர்களோடு நாம் கடைபிடிக்க வேண்டிய கட்டளைகள் என இருஉட்பிரிவுகள் உள்ளன. வாக்குத்தத்தோடு கூடிய கட்டளையாக 20:12 வசனம் இருக்கின்றது. மக்களின் அன்றாட வாழ்வை நெறிபடுத்த இக்கட்டளைகள் அவசியமாகிறது. இவை எக்காலத்திற்கும் ஏற்புடையவை.

நியாயத்தீர்ப்புகள் என்பது மக்கள் தங்கள் சமுதாய வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டியவை (21:1 - 24:11) இப்பகுதியில் எபிரேய அடிமைகள் குறித்த சட்டங்கள் (21:2-11), வன்முறைச் செயல்களுக்காகக் கொடுக்கப்படும் தண்டனைகள் (21 : 12-36) உரிமையாளரின் உடமைகள் (22:1-15) போன்றவை சொல்லப்பட்டுள்ளன. அதிகாரம் 22 மற்றும் 23-ல் சமுதாயத்தில் கடைபிடிக்க வேண்டிய கடமைகள் (22:16-23), ஈடுதருதல், ஒழுக்க நெறிகள், நிதியும் - இரக்கமும், ஓய்வுநாள் பற்றிய கட்டளை (23:10-13) ஓய்வு ஆண்டு, அனுசரிக்கப்பட வேண்டிய முப்பெரும் விழாக்கள் பற்றிய அறிவுரைகள், வழி நடத்தும் கர்த்தரின்

தூதன் (23:20-23) பற்றி அறிகிறோம்.

நியமங்கள் என்பது தேவனை ஆராதிக்க கொடுக்கப்பட்ட சமய நெறிமுறைகள். தமது மக்கள் தம்மைத் தொழுது கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதற்கென்று இஸ்ரவேலருக்கு ஒரு ஆசரிப்புக்கூடாரம் அமைக்க அதன் மாதிரியைக் காண்பித்து அதைப் போல உருவாக்கக் கட்டளையிடுகிறார். இப்பொழுது எங்கும் தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். (யோவா. 4:23, 24)

ஆண்டவர் கொடுத்த உடன்படிக்கையை மக்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளுகின்றனர். மோசே பலிபீடம் கட்டி 12 தூண்களையும் எழுப்பினார்; தகனபலி செலுத்தப்பட்டது. உடன்படிக்கையின் இரத்தத்தினால் இவர்களது வாக்கு உறுதி செய்யப்பட்டு அதன் ஷரத்துக்களை மக்கள் கேட்கும்படி மோசே வாசித்தார். இதனைத் தான் நாம் சீனாய் மலையின் நியாயப்பிரமாண உடன்படிக்கை என்கிறோம். இந்நிகழ்வின் முடிவுரையாக 31:18-ம் வசனம் அமைகிறது.

நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இச்சட்டங்களின் புதிய பரிமாணத்தை இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் விளம்புகின்றார். நியாயப்பிரமாணத்தினால் எவரும் நீதிமானாவதில்லை. நாம் கிருபையின் பிரமாணத்திற்குள் இருக்கின்றோம்.

25 முதல் 31 அதிகாரங்கள் ஆசரிப்புக் கூடாரம் அமைக்க மாதிரியைக் காண்பித்து அதன்படி அமைக்க கட்டளையிடுவதையும்; 35 முதல் 40 அதிகாரங்கள் அக்கூடாரத்தை உருவாக்கும் செயல் விளக்கமாக இருப்பதையும் காண்கின்றோம். எனவே விஷயங்கள் இருமுறை பதிவாகியுள்ளன. மேலும் இப்பகுதிகள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு எருசலேம் திரும்பிய பின் ஆலயத்தில் நடத்தப்படும் வழிபாடு மக்களால்முதன்மையாகக் கருதப்பட்ட காலத்தில் இது யாத்திராகமப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.

இவ்விரு பகுதிகளையும் பிரிக்கும் வகையில் 32-34 அதிகாரங்கள் உள்ளன. இவ்வதிகாரங்களில் வெகுவிரைவில் தேவ கட்டளைகளுக்கு வழி விலகிய ஆரோன் மற்றும் இஸ்ரவேலரது பாவச் செயல்களான பொன் கன்றுக்குட்டி செய்து தொழுது கொள்ளுதல், மோசேயின் அறைகூவல், லேவியரின் இணக்கம், ஆண்டவரின் சினம், மோசேயின் ஊக்கமான திறப்பின் வாசல் ஜெபமன்றாட்டு, சந்திப்புக் கூடாரம் அமைத்தல், கற்பலகைகளில் இரண்டாம் முறை கற்பனைகள் எழுதப்படல், உடன்படிக்கை புதுப்பித்தல், பிரகாசிக்கும் மோசேயின் முகம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.



## 25-31 மற்றும் 35-40 அதிகாரங்களின் சுருக்கமான கண்ணோட்டம்

1. கூடாரத்திற்கான காணிக்கை - 25: 1-9, 35:4-9, 35:20-29+35:20-29
2. உடன்படிக்கைப் பெட்டி - 25 : 10-22 + 37 : 1-9- நீள, அகல உயரம் முறையே 2 ½ x 1½ x 1½ - சீத்திம் மரம் - பசும்பொன் தகட்டால் மூடப்பட்டது. பெட்டிக்குள் சாட்சிப்பிரமாணம் வைக்கப்பட்டது. இரு கேருபீன்கள் அவற்றின் விளிம்புகளில் பொன்தகட்டால் செய்து நிறுவப்பட்டது.
3. மேஜை - 25 : 23-30+37:10-16- சீத்திம் மரம் - பசும்பொன் தகட்டால் மூடப்பட்டது. சுற்றிலும் பொன் தோரணம்.
4. விளக்குத் தண்டு - பொன்னினால் - அடிப்பு வேலையாய் - ஆறு கிளைகளுடன் செய்யப்பட்டது. அதற்குரிய பணமுட்டுக்கள் ஒரு தாலந்து பசும் பொன்.
5. வாசஸ்தலம் - 26:1-37 + 36:8-38- திரித்த மெல்லிய பஞ்சு நூல் + இரத்தாம்பர நூல் + சிவப்பு நூல் கொண்டு நெய்யப்பட்டது - மூடுதிரை 28 x 4 முழம் - 11 மூடுதிரைகள் - மூடிகள் : சிவப்புத் தீர்ந்த ஆட்டுத்தோலின் மேல் தகசுத்தோல்.
6. பலிபீடம் - 27:1-8 + 38:1-7 - 5 x 5 x 3 முழம் - சீத்திம் மரம் - 4 கொம்புகள் - அனைத்தும் வெண்கலத்தால் செய்யப்பட்டது.
7. பிரகாரம் - 27 : 9-19 + 38 : 9-20- 100 x 50 x 5 முழம் - தெற்கு மற்றும் வடதிசைகளில் முறையே 100 முழ தொங்குதிரைகள் மேற்கு மற்றும் கீழ்திசைகளில் முறையே 50 முழ தொங்குதிரைகள் திரித்த மெல்லிய பஞ்சு நூல் - வெண்கலத் தூண்கள் - தூண்கள் வெள்ளியினாலான பூண்களால் கட்டப்பட்டது.
8. அணையாவிளக்கு - 27:20, 21
9. ஆசாரியர் உடை - 28 : 1-14 + 39 : 1-7
10. மார்ப்பதக்கம் - 28: 15-30 + 39 : 8-21
11. பிற உடைகள் - 28:31-43 + 39:22-31
12. குரு பிரதிஷ்டை - 29: 1-37
13. அனுதின வழிபாடு - 29:38:46
14. தூபபீடம் - 30:1-10 + 37 : 25-28 - 1 x 1 x 2 முழம்
15. தலைக்கட்டு வரி - 30:11-16
16. வெண்கல நீர் தொட்டி - 30 : 18 + 38:8
17. அபிஷேகத் தைலம் 30 : 22-23
18. தூபவர்க்கம் - 30 : 34-38
19. கலைஞர்கள் - 31 : 12-17 + 35 :1-3
20. கூடாரப் பொருட்கள் - 35 : 10-38 + 39 :32-43
21. கூடாரப் பிரதிஷ்டை - 40 : 1 - 30